هداية
جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மதீனாவின் சிறப்புகள்

**தொகுப்பு**

**அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு**

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மதீனாவின் சிறப்புகள்

1

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

எல்லா ஊர்களையும் மிகைக்கக் கூடியதும் ‘யஸ்ரிப்’ என்று மக்கள் அழைக்கக் கூடியதுமான ஓர் ஊருக்கு (புலம் பெயர்ந்து செல்லுமாறு) நான் கட்டளை இடப்பட்டேன். அதுதான் மதீனா. இரும்பின் துருவை (கொல்லனின்) உலை நீக்கிவிடுவதைப் போன்று மதீனா (தீய) மனிதர்களை வெளியேற்றிவிடும்.



அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், புகாரி 1871

# மதீனாவின் சிறப்புகள்



நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

நான் மக்காவிலிருந்து புலம் பெயர்ந்து பேரீச்சந் தோட்டங்கள் நிறைந்த ஒரு பூமிக்குச் செல்வதாகக் கனவு கண்டேன். அந்த பூமி "யமாமா' அல்லது "ஹஜர்' ஆகத்தான் இருக்கும் என்று நான் எண்ணினேன். ஆனால், அது யஸ்ரிப்-மதீனாவாகி விட்டது.



அறிவிப்பாளர்: அபூமூசா (ரலி) அவர்கள். புகாரி 3622 (ஹதீஸின் பகுதி)

# மதீனாவின் சிறப்புகள்

3

நபி (ﷺ) அவர்கள் பயணத்திலிருந்து ஊர் திரும்பும்போது மதீனாவி(ல் உள்ள வீடுகளி)ன் சுவர்களைக் கண்டதும் தமது ஊர்தி ஒட்டகத்தை விரைவாகச் செலுத்துவார்கள். அவர்கள் பிராணியின் மீது அமர்ந்திருந்தால், மதீனா மீது கொண்ட அன்பினால் அதை முடுக்கிவிடுவார்கள்.



அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள், புகாரி 1886

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மதீனாவின் சிறப்புகள்

4

உமர்(ரலி) அவர்கள் கூறியதாவது.
இறைவா! உன் பாதையில் வீரமரணம்
அடையும் பாக்கியத்தை எனக்கு
வழங்குவாயாக! எனது மரணத்தை உன்
தூதருடைய ஊரில் ஏற்படுத்துவாயாக!



புகாரி 1890

# மதீனாவின் சிறப்புகள்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

இப்ராஹீம் (அலை) அவர்கள் மக்காவைப் புனித நகரமாக அறிவித்து, மக்காவாசிகளுக்காகப் பிரார்த்தித்தார்கள்.

இப்ராஹீம் (அலை) அவர்கள் மக்காவைப் புனித நகரமாக அறிவித்ததைப் போன்று நான் மதீனாவைப் புனித நகரமாக அறிவிக்கிறேன்.

இப்ராஹீம் (அலை) அவர்கள் மக்காவாசிகளுக்காகப் பிரார்த்தித்ததைப் போன்று நான் மதீனாவின் (அளவைகளான) ’ஸாஉ’மற்றும் ’முத்’து ஆகியவற்றில் இரு மடங்கு (வளம் ஏற்படப்) பிரார்த்திக்கிறேன்.



அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் ஸைத் பின் ஆஸிம் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2641

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மதீனாவின் சிறப்புகள்

6

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

இப்ராஹீம் (அலை) அவர்கள் மக்காவைப் புனித நகரமாக அறிவித்தார்கள். நான், இதன் (அதாவது மதீனாவின்) இரு கருங்கல் மலைகளுக்கு இடைப்பட்ட பகுதியைப் புனிதமானதாக அறிவிக்கிறேன்.



அறிவிப்பாளர் : ராஃபிஉ பின் கதீஜ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2643

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மதீனாவின் சிறப்புகள்

7

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

இப்ராஹீம் (அலை) அவர்கள் மக்காவைப் புனித நகரமாக அறிவித்தார்கள். நான் மதீனாவின் இரு கருங்கல் மலைகளுக்கு இடைப்பட்ட பகுதியைப் புனிதமானதாக அறிவிக்கிறேன். அதன் முள்மரங்கள் வெட்டப்படக் கூடாது, அதன் வேட்டைப் பிராணிகள் வேட்டையாடப்படக் கூடாது.



**அறிவிப்பாளர்: ஜாபிர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2645**

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر


# மதீனாவின் சிறப்புகள்

8

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

மதீனாவின் இரு கருங்கல் மலைகளுக்கு இடைப்பட்ட பகுதியின் மரங்களை வெட்டுவது, அதன் வேட்டைப் பிராணிகளைக் கொல்வது ஆகியவற்றுக்கு நான் தடை விதிக்கிறேன்.

மக்கள் அறிந்து கொள்பவர்களாயிருந்தால் மதீனாவே அவர்களுக்குச் சிறந்ததாகும். எவரும் அதை வெறுத்து அதை விட்டுச் சென்றால், அவரை விடச் சிறந்தவரை அதில் அல்லாஹ் குடியமர்த்தாமல் இருப்பதில்லை. அங்கு ஏற்படும் பசி பட்டினியையும் கடினமான வாழ்க்கையையும் சகித்துக்கொண்டு அங்கு நிலைத்திருப்பவருக்கு மறுமை நாளில் நான் பரிந்துரைப்பவனாக அல்லது சாட்சியம் அளிப்பவனாக இருப்பேன்.



அறிவிப்பாளர்: சஅத் பின் அபீவக்காஸ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2646

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மதீனாவின் சிறப்புகள்

9

மதீனாவாசிகளுக்குத் தீங்கிழைக்க எவரேனும் விரும்பினால் 'நெருப்பில் ஈயம் கரைவதைப் போன்று' அல்லது 'தண்ணீரில் உப்பு கரைவதைப் போன்று' அவரை அல்லாஹ் கரைத்துவிடுவான்' என்று அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.



அறிவிப்பாளர்: சஅத் பின் அபீவக்காஸ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2649

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மதீனாவின் சிறப்புகள்

10

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

மதீனா புனித நகரமாகும்.அதில் யார் (மார்க்கத்தின் பெயரால்) புதிதாக ஒன்றைப் புகுத்துகின்றானோ, அல்லது புதியவற்றைப் புகுத்துபவனுக்கு அடைக்கலம் அளிக்கின்றானோ அவனுக்கு அல்லாஹ்வின் சாபமும் வானவர்கள் மற்றும் அனைத்து மக்களின் சாபமும் ஏற்படும்.

அவன் செய்த கூடுதலான வழிபாடு மற்றும் கடமையான வழிபாடு எதையும் மறுமை நாளில் அல்லாஹ் ஏற்கமாட்டான்.



அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 2656

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மதீனாவின் சிறப்புகள்

11

ஆஸிம் பின் சுலைமான் அல்அஹ்வல் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் அனஸ் (ரலி) அவர்களிடம், ’அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் மதீனாவைப் புனித (நகர)மாக அறிவித்தார்களா?’ என்று கேட்டேன்.

அதற்கு அவர்கள், ’ஆம் ! அது புனித (நகர)மாகும். அதன் மரங்கள் வெட்டப்படக் கூடாது. யார் அவ்வாறு செய்கிறாரோ அவர்மீது அல்லாஹ்வின் சாபமும் வானவர்கள் மற்றும் மக்கள் அனைவரின் சாபமும் ஏற்படும்’ என்று கூறினார்கள்.



முஸ்லிம் 2651

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மதீனாவின் சிறப்புகள்

12

மதீனாவில் மான்கள் மேய்ந்து கொண்டிருப்பதை நான் கண்டால் அவற்றை (விரட்டவோ பிடிக்கவோ முயன்று) பீதிக்கு உள்ளாக்க மாட்டேன். (ஏனெனில்) 'மதீனாவின் இரு கருங்கல் மலைகளுக்கு இடைப்பட்ட பகுதி புனிதமானதாகும்' என்று அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறியுள்ளார்கள்.




அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 2658

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மதீனாவின் சிறப்புகள்

13

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களிடம் முதலாவதாகப் பழுக்கும் கனி கொண்டு வரப்பட்டால், ’இறைவா! எங்கள் நகரத்தில் எங்களுக்கு வளத்தை ஏற்படுத்துவாயாக! எங்கள் கனிகளிலும் எங்கள் (அளவைகளான) ’முத்’து மற்றும் ’ஸாஉ’ ஆகியவற்றிலும் (தற்போதுள்ள) வளத்துடன் மற்றொரு மடங்கு வளத்தை வழங்குவாயாக’ என்று பிரார்த்தித்துவிட்டு, அங்கு வந்திருக்கும் குழந்தைகளில் மிகச் சிறிய குழந்தைக்கு அந்தக் கனியைக் கொடுப்பார்கள்.



அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 2661

هداية
جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# மதீனாவின் சிறப்புகள்

14

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் தமது கரத்தால் மதீனாவைச் சுட்டிக்காட்டி, 'இது பாதுகாப்பான புனித நகரம்' என்று கூறினார்கள்.



அறிவிப்பாளர் : சஹ்ல் பின் ஹுனைஃப் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2666

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மதீனாவின் சிறப்புகள்

15

நாங்கள் மதீனாவிற்கு (நாடு துறந்து) வந்த போது, மதீனாவில் பெருநோய் ஏற்பட்டிருந்தது.

அபூபக்ர் (ரலி) அவர்களும் பிலால் (ரலி) அவர்களும் நோய்வாய்ப்பட்டனர். தம் தோழர்கள் நோய்வாய்ப்படுவதை அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கண்டபோது, ’இறைவா! நீ மக்காவை எங்கள் நேசத்திற்கு உரியதாக ஆக்கியதைப் போன்று, அல்லது அதைவிட அதிகமாக மதீனாவை எங்கள் நேசத்திற்கு உரியதாக ஆக்குவாயாக! மேலும், இந்நகரை ஆரோக்கியமானதாகவும் ஆக்குவாயாக! இதன் (அளவைகளான) ’ஸாஉ’மற்றும் ’முத்’து ஆகியவற்றில் எங்களுக்கு நீ வளத்தை வழங்குவாயாக! இங்குள்ள காய்ச்சலை ’ஜுஹ்ஃபா’ எனுமிடத்திற்கு இடம்பெயரச் செய்வாயாக!’ என்று பிரார்த்தித்தார்கள்.



அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 2667

هداية
جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மதீனாவின் சிறப்புகள்

16

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

மதீனாவில் இடர்பாடுகளைச் சகித்துக் கொண்டவருக்காக மறுமை நாளில் நான் பரிந்துரைப்பவனாக, அல்லது சான்றுரைப்பவனாக இருப்பேன்.



அறிவிப்பாளர்: இப்னு உமர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2668

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மதீனாவின் சிறப்புகள்

17

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

மதீனாவின் நுழைவாயில்களில் வானவர்கள் இருப்பர். மதீனாவிற்குள் கொள்ளை நோயும் தஜ்ஜாலும் நுழைய முடியாது.



அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 2672

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخير

# மதீனாவின் சிறப்புகள்

18

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்

(இறுதி நாள் நெருங்கும்போது) மஸீஹுத் தஜ்ஜால் கிழக்குத் திசையிலிருந்து மதீனாவைக் குறிவைத்து வந்து, ‘உஹுத்’ மலைக்குப் பின்னால் இறங்குவான்.

பின்னர் வானவர்கள் அவனது முகத்தை ஷாம் திசை (வடக்கு) நோக்கித் திருப்பி விடுவார்கள். அங்குதான் அவன் மடிவான்.



அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்,முஸ்லிம் 2673

جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليـات بالخبـر

# மதீனாவின் சிறப்புகள்



அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்

அது (அதாவது மதீனா) தூயது (தைபா) ஆகும். நெருப்பு, வெள்ளியின் அழுக்கை நீக்குவதைப் போன்று மதீனா தன்னிலுள்ள தீயவர்களை வெளியேற்றும்.



அறிவிப்பாளர்: ஸைத் பின் ஸாபித் (ரலி) அவர்கள். முஸ்லிம் 2677

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மதீனாவின் சிறப்புகள்

20

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்

உயர்ந்தோன் அல்லாஹ்வே மதீனாவுக்கு "தாபா" (தூயது) எனப் பெயரிட்டான்.



அறிவிப்பாளர்: ஜாபிர் பின் சமுரா (ரலி) அவர்கள்,முஸ்லிம் 2678

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மதீனாவின் சிறப்புகள்



அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்

ஷாம் (சிரியா) நாடு வெற்றி கொள்ளப்படும், உடனே ஒரு கூட்டத்தார் தம் குடும்பத்தாருடன் வாகனங்களை விரட்டிக்கொண்டு மதீனாவிலிருந்து வெளியேறுவர். ஆயினும் மதீனாவே அவர்களுக்குத் சிறந்ததாகும். அவர்கள் அறிந்திருந்தால்!

பின்னர் யமன் வெற்றி கொள்ளப்படும், உடனே ஒரு கூட்டத்தார் தம் குடும்பத்தாருடன் வாகனங்களை விரட்டிக்கொண்டு மதீனாவிலிருந்து வெளியேறுவர். ஆயினும், மதீனாவே அவர்களுக்குச் சிறந்ததாகும், அவர்கள் அறிந்திருந்தால்!

பின்னர் இராக் வெற்றி கொள்ளப்படும், உடனே ஒரு கூட்டத்தார் தம் குடும்பத்தாருடன் வாகனங்களை விரட்டிக்கொண்டு மதீனாவிலிருந்து வெளியேறுவர். ஆயினும், மதீனாவே அவர்களுக்குச் சிறந்ததாகும். அவர்கள் அறிந்திருந்தால்!



அறிவிப்பாளர்: சுஃப்யான் பின் அபீஸுஹைர் (ரலி) அவர்கள். முஸ்லிம் 2683

# மதீனாவின் சிறப்புகள்



நாங்கள் 'தபூக்' போரின்போது அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களுடன் புறப்பட்டோம்.

பிறகு நாங்கள் (போரை முடித்துக்கொண்டு மதீனாவிற்கும் சிரியாவிற்கும் இடையே உள்ள) 'வாதில் குரா' எனும் இடத்திற்கு வந்தபோது அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள், 'நான் விரைந்து மதீனா செல்லப் போகிறேன். எனவே, உங்களில் விரும்பியவர் என்னுடன் விரைந்து வரலாம். விரும்பியவர் (இங்கேயே) தங்கியிருக்கலாம்' என்று சொன்னார்கள்.

நாங்கள் புறப்பட்டு மதீனாவை நெருங்கியபோது, இது 'தாபா' (தூய நகரம்) ஆகும். இது உஹுத் மலை. இது நம்மை நேசிக்கிறது. நாமும் அதை நேசிக்கிறோம்' என்று சொன்னார்கள்.



அறிவிப்பாளர்: அபூஹுமைத் அப்துர் ரஹ்மான் பின் சஅத் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2690

# மதீனாவின் சிறப்புகள்

23

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்

எனது இந்த (மஸ்ஜிதுந் நபவீ) பள்ளிவாசலில்
தொழுவதானது, மற்றப் பள்ளிவாசல்களில்
தொழும் ஆயிரம் தொழுகைகளைவிடச் சிறந்ததாகும்.
(மக்காவில் உள்ள) ‘மஸ்ஜிதுல் ஹராம்’
பள்ளிவாசலைத் தவிர.




அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்,முஸ்லிம் 2692

# மதீனாவின் சிறப்புகள்

24

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்

எனது இந்த (மஸ்ஜிதுந் நபவீ) பள்ளிவாசல்,
(மக்காவில் உள்ள) மஸ்ஜிதுல் ஹராம்,
(ஜெருசலத்தில் உள்ள) மஸ்ஜிதுல் அக்ஸா ஆகிய
மூன்று பள்ளிவாசல்களைத் தவிர வேறெதற்கும்
(நன்மையை எதிர்பார்த்து) பயணம்
மேற்கொள்ளப்படக் கூடாது.



அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்,முஸ்லிம் 2698

# மதீனாவின் சிறப்புகள்

25

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்

எனது இல்லத்திற்கும் எனது சொற்பொழிவு மேடை(மிம்பரு)க்கும் இடைப்பட்ட பகுதியானது, சொர்க்கத்துப் பூஞ்சோலைகளில் ஒரு பூஞ்சோலையாகும்.

எனது சொற்பொழிவு மேடையானது, எனது (அல்கவ்ஸர்) தடாகத்தின் மீது அமைந்துள்ளது.



அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்,புகாரி 1888

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# மதீனாவின் சிறப்புகள்



இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது.

பத்னுல்வாதியில் உள்ள துல்ஹுலைஃபாவில் (இரவின் இறுதியில்) ஓய்வெடுக்கும் இடத்தில் நபி (ஸல்) அவர்கள் இருந்தபோது கனவு கண்டார்கள்.

(அக்கனவில்) ‘நீங்கள் வளமிக்க அழகிய பள்ளத்தாக்கில் இருக்கின்றீர்கள்’ என்று (வானவரால்) கூறப்பட்டது.

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் ஓய்வெடுத்த இடத்தைத் தேர்வு செய்ததைப் போன்று இப்னு உமர் (ரலி) அவர்களும் அங்கேயே தமது ஒட்டகத்தைப் படுக்கவைப்பார்கள். இப்னு உமர் (ரலி) அவர்களின் புதல்வர் சாலிமும் அவ்வாறே செய்வார்கள்.

முஅர்ரஸ் எனுமிடம் பத்னுல்வாதியில் உள்ள பள்ளிவாசலின் கீழ்ப்புறத்தில் இருந்த சாலைக்கும் மக்கள் தங்குமிடத்திற்கும் நடுவில் உள்ளது என்று மூசா பின் உக்பா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.



جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மதீனாவின் சிறப்புகள்

27

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்

தினந்தோறும் காலையில் (வெறும் வயிற்றில்) ஏழு ‘அஜ்வா’ (ரகப்) பேரீச்சம் பழங்களைச் சாப்பிடுகின்றவருக்கு, அந்த நாள் எந்த விஷமும் இடரளிக்காது. எந்தச் சூனியமும் அவருக்கு இடையூறு செய்யாது.



அறிவிப்பாளர்: சஅத் பின் அபீவக்காஸ் (ரலி) அவர்கள்,புகாரி 5445

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மதீனாவின் சிறப்புகள்

28

**நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்**

**(மதீனாவின்) மேட்டுப் பகுதியில் விளையும்**
**‘அஜ்வா’ (ரகப்) பேரீச்சம்பழத்தை**
**அதிகாலை உண்பதில்**
**‘நிவாரணம்’ அல்லது ‘விஷமுறிவு’ உள்ளது.**



அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள்,முஸ்லிம் 4159